# அபிஜித் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)




**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ அபிஜித் சக்தி**

பரம சாத்தியம், அதீதானந்த போக்கியம்,

பரிகதம் பரிவேத்தியம்

**3. திருப்பாவைபாசுரம் – 13 அபிஜித் இயல்பு**

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்

கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்

பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்

வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்

புள்ளும் சிலம்பினாண் போதரிக் கண்ணினாய்

குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே

பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீ நன்னாளால்

கள்ளம் தவிர்த்து கலந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/qy0KEg6MLL0**

**விளக்கம் :**

புள்ளின் வாய் கிண்டானைப் பொல்லா அரக்கனைக்கிள்ளிக் களைந்தவன், நக்ஷத்ரமே அபிஜித். வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று. இந்த நேரம்தான் அபிஜித் நக்ஷத்ர நேரமாகும். பறவைகளும் இந்த தெய்வீக விடியலை அறிவித்து கூவ தொடங்கிவிட்டன. கண்ணனின் தரிசனம் காலத்தினால் கள்ளத்தனமாகவோ அல்லது நல்லத்தனமாகவோ

இந்த அபிஜித் நக்ஷத்ரத்திற்கு தெய்வீக உறவுகள் அடிக்கடி கிட்டும். சாதனைகள் ஆச்சரியத்தக்க அதிசயத்தக்க, போக்கியமாக அதிர்ஷ்டமாக இவர்களை வந்தடையும். விடிவெள்ளி முளைத்து விட்டது. எனவே உலகியல் சுகங்கள் அனைத்தும் கிடைத்து விட்டது. அந்த சுகங்களும் சலித்துப் போய் முடிவுக்கு கொண்டு வந்து சுகமான, பரம அனுபவங்களாக மாற்றம் தெரிந்தவர்களே இந்த அபிஜித் நக்ஷத்ரதாரர்கள், ஜீவாத்மா, பரமாத்மா (அ) ராதேகிருஷ்ணா (அ) ஆண்டாள் அரங்கன் என்கின்ற கலவை கள்ளம், கபடமின்றி நன்னாட்களில் நடைபெறுவதே அபிஜித்தின் பிரவேசமாகும்.

வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று. இதுவே அபிஜித்தின் பொன்னான நேரமாகும். பத்துத்தலை உடைய ராவணனையும், பறவைத் தலை உடைய பகாசூரனையும் கிள்ளிக் கொன்ற பெருமானே, இதையே கீர்த்தியாக காட்டப்பட்டுள்ளது.

**புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்**
**கிள்ளி களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்.**

பறவைகள் மட்டுமே, அதிகாலையில் பகவானை பாடும் அறிவு ஜீவிகளாகும். அவர்களே நிர்வாகம் செய்யும். கமல வண்டுக் கண்ணழகி பரம சாத்தியங்களை, அற்புத ஆனந்தங்களை போக்கியமாக அனுபவிக்க இருப்பவர்களே அபிஜித் நக்ஷத்ரகாரர்கள்.

உள்ளத்தில் கள்ளமில்லாமல் பகவானை கடக்க பரிவேத்தியங்களுடன், பரிசுத்தமாக கலப்பவர்களே இந்த சித்தர்களாகும்.

குள்ளக் குளிர நீரை நீராடக்கூடாது. குடைந்து நீராடினாலும், கள்ளமில்லாமல் அனைவருக்கும் வாய்ப்பு அளிப்பது இவர்களின் சுபாவமாகும். உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசாமல் பிள்ளைகள் எல்லோரும் பகவானின் பாதக்கமலம் போக வேண்டும் என்ற நல்லெண்ணம் எப்பொழுதும் நிலவுகிறது. எனவே கள்ளத்தனமாக நீ மட்டும் கலக்க நினைக்காமல் அனைவரையும் கலக்க வைத்தாலே அபிஜித் சிறப்பாகும். எனவே அபிஜித் கலவையே வருக! அபிஜித்தின் கலவையே அருள்க!

## 4. வேதத்தில் அபிஜித் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

ஓம் ப்ரம்மா வித்மஹே
சர்வ மேதாவி தீமஹி
பரிகதாய தீமஹி
தன்னோ அபிஜித் ப்ரசோதயாத்

சாதனை புரிவதில் சிறந்தவன் நீ
சோதனை களையே களைபவன் நீ
பாரினில் அனைத்தையும் சிறப்புடனே
பலனாய் மாற்றுவாய் நமோ நமோ

சத்தியம் உனக்கு விருப்பாகும்
சக்தி பெற்றிட துருப்பாகும்
எத்திசை யோரும் புகழ் மணக்கும்
ஏந்தல் நீயே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. அபிராமி அந்தாதியில் அபிஜித் சக்தி

**புகழும் அறமும் வளர**

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்

போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,

காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்

சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

**வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற**

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்

கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?

மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்

பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.

**அருள் உணர்வு வளர**

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை; கோல இயல்

மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை; வந்துதித்த

வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீது அன்னமாம்

கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

**அம்பிகையை மனத்தில் காண**

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி

கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்

விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும்; வெண்ணகையும்,

உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 6. லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அபிஜித் சக்தி

த்ரயீ த்பிவர்க நிலயா த்ரிஸ்தா த்ரிபுர மாலினீ
நிராமயா நிராலம்பா ஸ்வாத்மாராமா ஸுதா ஸ்ருதி

ஸம்ஸாரபங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா
யஜ்ஞப்ரியா யஜ்ஞகர்த்ரீ யஜமான ஸ்வரூபிணீ

தர்மாதாரா தனாத்யக்ஷா தனதான்ய விவர்த்தினீ
விப்ரப்ரியா விப்ரரூபா விச்வப்ரமண காரிணீ

விச்வக்ராஸா வித்ருமாபா வைஷ்ணவீ விஷ்ணுரூபிணீ
அயோநிர் யோநி நிலயா கூடஸ்தா குலரூபிணீ

விரகோஷ்டீ ப்ரியா வீரா நைஷ்கர்ம்யா நாதரூபிணீ
விஜ்ஞானகலனா கல்யா விதக்தா பைந்தவாஸநா

தத்வாதிகா தத்வமயீ தத்வமர்த்த ஸ்வரூபிணி
ஸாமகான ப்ரியா ஸௌம்யா ஸதாசிவ குடும்பினீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 7. கந்தகுரு கவசகத்தில் அபிஜித் சக்தி

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்

உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே

கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்

புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை

திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக

புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்

நின்நாமம் ஏத்துவதே நான்செய்யும் தவமாகும்

நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்

முருகா முருகா வென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்

உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்

அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா

முருகன் இலாவிட்டால் முவ்வுலக மேதப்பா

அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா

அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்

ஸ்தாவர ஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்

முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு

ஸ்கந்தாச்ரம மிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்

சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்

சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா

வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ

சந்தேஹ மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்

சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்

சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 8. கந்தர் அநுபூதி அபிஜித் சக்தி

தன்னந் தனி நின்றது, தான் அறிய

இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?

மின்னும் கதிர் வேல் விகிர்தா, நினைவார்

கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே.(49)

மதிகெட்டு அறவாடி, மயங்கி, அறக்

கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன்?

நதி புத்திர, ஞான சுகாதிப, அத்

திதி புத்திரர் வீறு அடு சேவகனே.(50)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 9. ராகங்களில் அபிஜித் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| நாசிகபூஷ்ணி | கோகிலம் | ரசிக பிரியா | ரசிக பிரியா |

## 10. மூலமந்திரம்

ஓம் பூர் புவஸ் ஸுவஹ
தம் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோனஹ ப்ரசோதயாத்

## 11. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பனை | சாரபருப்பு | கருங்காலி | வெள்ளெருக்கு |

## 12. பரிகாரம்

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra